# வாரப்பாடசாலை செயற்பாட்டுப் பத்திரம்

## பாடம்:- தமிழ் தரம் 13

01. பின்வரும் செய்யுள்களை வாசித்து அவற்றின் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

ஆழ நெடுந் திரைஆறு கடந்து இவர் போவாரோ?
வேழ நெடும் படை கண்டு விலங்கிடும் வில்லாலோ?
**"தோழமை" என்று அவர் சொல்லிய ஒரு சொல் அன்றோ?**
ஏழ்மை வேடன் இறந்திலேன் என்று எனை ஏசாரோ?

"முன்னவன்" என்று நினைந்திலன்: மொய்புலி அன்னான் ஓர்
பின்னவன் நின்றனன் என்றிலன்: அன்னவை பேசானேல்:
என் இவன் என்னை இகழ்ந்தது? இவ் எல்லை கடந்து அன்றோ?
முன்னவர் நெங்சினில்இ வேடர் விடும் சரம் வாயாவோ?

1. இப்பாடல் இடம்பெற்ற சந்தர்ப்பத்தை விளக்குக.
2. இப்பாடல்களினூடாக வெளிப்படும் குகனின் வீரம் எத்தகையது?
3. தடித்த எழுத்திலுள்ள பகுதியை விளக்குக.
4. குகன்-இராமன் இருவருக்கிடையிலான நட்பு எத்தகையது?

2. **இரு துயரங்கள்** நாடகத்தில்

அ. இரு துயரஙகளுக்கும் இடையிலான முரண் வளர்க்கப்படுமாற்றை விளக்குக.

ஆ. டொக்டர் கந்தப்புஇ மரோகரன் ஆகிய பாத்திரங்களின் நடத்தை மூலம் மனித இயல்பு புற்றி புரிந்துகொள்பவற்றை விளக்குக.

இ. நவீன நாடகத்தின் ில முக்கி பண்புகள் வெளிப்படுமாற்றை விளக்குக.

3. பேராசிரியர் க. கைலாசபதியின் **மானுடம் தழுவிய கவிஞர்கள்** எனும் கட்டுரையினை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

அ. பாரதியார் பற்றிய கட்டுரையாசிரியரின் மதிப்பீடு

ஆ. பெருங்கவிஞர்கள் பற்றிய கட்டுரையாசிரியரின் வரையறை

இ. வள்ளுவர், கம்பன், இளங்கோ, பாரதி ஆகியோர் மகாகவிகள் என மதிக்கப் படுமாற்றை விளக்குக.